Remove Watermark Now



# மாநில பொதுக்குழு கூட்டம்

## 2014-15க்கான ஆண்டறிக்கை விவரம்

ஆடி 2, 3 சனி, ஞாயிறு (2015 ஜூலை 18, 19)
ரவுண்டு டேபிள் 30 விவேகானந்தா வித்யாலயா
அகரம்மேல், சென்னை



# சேவாபாரதி தமிழ்நாடு

(பதிவு எண் 511/99)



ராஷ்ட்ரீய சேவா சங்கமத்தில் பங்குபெற்ற
தமிழக பிரதிநிதிகள்



ராஷ்ட்ரீய சேவா சங்கமத்தில்
திரு. சுந்தர லட்சுமணன், திரு. கங்கை அமரன்

Remove Watermark Now
pdfelement

சேவை பண்பாடு நல்லிணக்கம்

# சேவாபாரதி தமிழ்நாடு

## மாநில பொதுக்குழு கூட்டம்

2015 ஜூலை 18-19 - சனி, ஞாயிறு

12. எம்.வி. நாயுடு தெரு,சேத்துப்பட்டு,
சென்னை - 600 031.
தொலைபேசி - 044- 2836 4075
email: sevabharathitn@rediffmail.com
website:www.sevabharathitn.org



Remove Watermark Now
pdfelement

Remove Watermark Now

# சேவாபாரதி தமிழ்நாடு

**பதிவு எண் 511/99**
12. எம்.வி. நாயுடு தெரு,சேத்துப்பட்டு,
சென்னை - 600 031.
தொலைபேசி - 044- 2831 4075
email: sevabharathitn@rediffmail.com website:www.sevabharathitn.org

## மாநில பொதுக்குழு கூட்டம்

**விவேகானந்தா வித்யாலயா, அகரம்மேல்**

**ஆடி 2,3 (2015 ஜூலை 18, 19) - சனி, ஞாயிறு**

அன்புடையீர் வணக்கம்,

நமது சேவாபாரதி தமிழ்நாடு அறக்கட்டளையின் பொதுக்குழு கூட்டத்திற்கு வருகை புரிந்திருக்கும் உங்கள் அனைவரையும் வரவேற்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.

நமது அறக்கட்டளையின் சேவைப்பணிகள், எண்ணிக்கை யிலும், தரத்திலும், பரப்பளவிலும் படிப்படியாக வளர்ந்து வருவது மகிழ்ச்சியான விஷயம்.

2014-2015 ஆண்டிற்கான ஆண்டறிக்கையை நமது மாநில தலைவர் திரு. துரை. சங்கர் அவர்கள் முன்னிலையில் வாசிக்கிறேன்.

நமது மத்திய அலுவலகத்திற்கு வந்த தகவல்களைக்கொண்டு இந்த அறிக்கையை தொகுத்துள்ளோம். விடுபட்டுப்போன நிகழ்வுகள் பின்னால் சேர்த்துக் கொள்ளப்படும் என்பதையும் தெரிவித்து கொள்கிறேன்.

இந்த ஆண்டறிக்கையைக் கொணர்வதில் நம்முடன் இணைந்து செயலாற்றிய எல்லா சேவாபாரதி பொறுப்பாளர்களுக்கும் நமது நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

அன்புடன்
தேசியப் பணியில்
**இரா. இராஜேஷ் விவேகானந்தன்**
*மாநிலப் பொதுச்செயலாளர்*



pdfelement

## ஜூன் 2014

### மாநில பொதுக்குழு கூட்டம்



❖ ஜூன் மாதம் 21, 22ல் திருவண்ணாமலையில் அமைந்துள்ள பாரதீய பண்பாட்டு கல்வி மையத்தில், சேவாபாரதி தமிழ்நாடு மாநில பொதுக்குழு கூட்டம் நடைபெற்றது. இரண்டு நாட்கள் நடைபெற்ற நிகழ்வில் பல்வேறு அமர்வுகளில் வரக்கூடிய ஆண்டிற்கான திட்டங்கள் குறித்து ஆலோசிக்கப்பட்டது.

❖ ராஷ்ட்ரீய ஸ்வயம்சேவக சங்கத்தின் க்ஷேத்ர பிரச்சாரக் திரு. ஸ்தாணுமாலயன் அவர்கள், ப்ராந்த சேவா ப்ரமுக் திரு. இராம இராஜசேகர், ப்ராந்த சஹ சேவா ப்ரமுக் திரு. மோகன் ஆகியோர் கலந்துகொண்டு வழிகாட்டினர்.

❖ பொதுக்குழுவில் நமது வேலைமுறை, கார்யகர்த்தர்களை அதிகப்படுத்துதல், கார்யங்களுக்கு குழு அமைத்தல் மற்றும் ஆண்களுக்கான பயிற்சி முகாம் பற்றி யோசிக்கப்பட்டது.

❖ பொதுக்குழுவில் நிறைவாக ஆண்டு இலக்கு பற்றிய விவரங்கள் பதிவு செய்யப்பட்டது.

## ஜூலை 2014

❖ திருவள்ளூர் மாவட்டம் தாமரைப்பாக்கத்தில் உழவாரப்பணி குழு அமைக்கப்பெற்று தனது முதல் சேவையை ஜூலை 29 அன்று துவக்கியது.

❖ வட சென்னை திரு.வி.க. நகரில் அமைந்துள்ள கல்விதான மையத்தில் குரு பூஜை விழா 2014 ஜூலை 7ம் தேதி நடைபெற்றது. மாணவர்கள் தம் ஆசிரியர்களுக்கு பாதபூஜை செய்வித்து அவர்தம் ஆசிகளை பெற்றனர்.



Remove Watermark Now
pdfelement

Remove Watermark Now

❖ சேலத்தில் ஜூலை 27ம் தேதியில் 10ம் வகுப்பு, 12ம் வகுப்பில் தேர்ச்சி பெற்ற 200 அரசு பள்ளிகளை தொடர்பு கொண்டதில், 70 பள்ளிகளில் இருந்து முதல் மூன்று இடங்களைப் பிடித்த 200 மாணவர்களுக்கு பரிசளிப்பு மற்றும் பாராட்டு விழா நடைபெற்றது. மாணவர்களின் பெற்றோர்கள் 300 பேர் கலந்து கொண்டனர். சிறப்பு விருந்தினராக ஆர்.எஸ்.எஸ்ஸின் வட தமிழக செயலாளர் டாக்டர் கே. குமாரசுவாமி அவர்கள் கலந்துகொண்டு வாழ்த்துரை வழங்கினார். மேலும் பல கல்வியாளர்களும், ஆன்மிகப் பெரியோர்களும் கலந்துகொண்டு ஆசியுரை வழங்கினர்.



pdfelement

❖ தாம்பரம் சானடோரியம் பகுதியில் அருள்மிகு ஸ்ரீ வரசித்தி விநாயகர் கோவிலில் ஜூலை 29ம் தேதியன்று 108 தீப பூஜை விமர்சையாக நடைபெற்றது.



❖ ஹிந்து ஆன்மிக, சேவைக் கண்காட்சியில் சேவாபாரதியின் சார்பாக அமைக்கப்பட்ட அரங்கினை சுமார் 6,000 பார்வையாளர்கள் பார்வையிட்டு நமது அமைப்பின் சேவைகளை அறிந்து பாராட்டினர்.

❖ 10.8.2014ல் பழவேற்காடு தையல்பயிற்சி வகுப்பு சான்றிதழ் வழங்கும் விழா நடைபெற்றது. நிகழ்ச்சியில் சேவாபாரதியின் மாநில பொதுச் செயலாளர் கலந்து கொண்டு தாய்மார்களுக்கு சான்றிதழ்கள் வழங்கினார்.



❖ ஆகஸ்ட் 16ம் தேதி வட சென்னை திரு.வி.க. நகர் பண்பாட்டு வகுப்பின் ஆண்டு விழா சிறப்பாக நடைபெற்றது. ஆர்.எஸ்.எஸ் விபாக் பிரச்சாரக் திரு எம்.டி. சங்கர் அவர்கள் நிகழ்ச்சியில் பங்கு கொண்டார்கள்.

❖ ஆகஸ்ட் 17ம் தேதி வட சென்னை சேவாபாரதி மற்றும் இந்திய மருத்துவ கழகம், பெரம்பூர் இணைந்து நடத்திய இலவச மருத்துவ முகாம் ஜி.கே.எம் காலனி நாடார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது. உடல்நலமற்ற நூற்றுக்கணக்கான பேர் கலந்து கொண்டு சிகிச்சை பெற்றனர்.

❖ ராஷ்ட்ரிய சேவாபாரதி கூட்டம் ஐதராபாத்தில் ஆகஸ்ட் 1,2 தேதிகளில் நடைபெற்றது. 450 இயக்கங்கள் கலந்துகொண்ட நிகழ்வில் சேவாபாரதியின் சார்பாக 3 பேர் கலந்து கொண்டனர்.




❖ அன்பு இல்ல பொறுப்பாளர்களின் பயிற்சி முகாம் ஆகஸ்ட் 9ல் சென்னை போரூர் சத்ய லோக்கில் நடைபெற்றது.

இல்லத்தில் தங்கியுள்ள குழந்தைகளின் ஆரோக்கியம், கல்வி, உணவு, மனநலம், பண்பாட்டு வளர்ச்சி,



Remove Watermark Now
pdfelement

சுற்றுச்சூழல் ஆகியவற்றிலும், இல்லம் கடைபிடிக்க வேண்டிய சட்ட திட்டங்கள் பற்றியும், வளர்ச்சிக் குழு மற்றும் பொறுப்பாளர்களுக்கு பல்துறை வல்லுநர்களால் பயிற்சி அளிக்கப்பட்டது.

குழந்தைகளின் பிரச்சினைகளை கையாள்வதில் கவனத்தில் கொள்ள வேண்டிய பல்வேறு அம்சங்கள் குறித்து ஸ்ரீ இராமச்சந்திரா மருத்துவக் கல்லூரி சமூக மருத்துவ பேராசிரியர் திருமதி வாணிஸ்ரீ அவர்கள் பயிற்றுவித்தார்.

- **முப்பெரும் விழா:**

  ஆகஸ்ட் 7 முதல் 21ம் தேதி வரையில் சுதந்திர தின விழா, பாரத மாதா பூஜை, மற்றும் ரக்ஷா பந்தன் ஒன்றிணைந்த முப்பெரும் விழாக்கள் மாவட்டந்தோறும் எல்லா சேவை மையங்களிலும், சில அரசு பள்ளிகளிலும் சென்னையில் தனியார் மகளிர் கல்லூரியிலும் சிறப்பாக கொண்டாடப்பட்டது.

- சேவை செய்பவருக்கான பயிற்சி மத்திய சென்னை ராமாபுரம் பகுதியில் ஆகஸ்ட் 31ம் தேதி நடைபெற்றது. 25 பேர் கலந்துகொண்டு பயிற்சி பெற்றனர்.

## செப்டம்பர் 2014

- ஆண்களுக்கான சேவை பண்புப் பயிற்சி முகாமானது குன்றத்தூர் விவேகானந்தா பள்ளியில் நடைபெற்றது.





pdfelement
Remove Watermark Now

ஆண்கள் சேவை பணிகளில் அதிகமாக கலந்துகொள்ளும் நோக்கோடு நடைபெற்ற இந்த இரண்டு நாள் முகாமில் 32 பேர் கலந்துகொண்டு பயனடைந்தனர்.

❖ காஷ்மீர் வெள்ள நிவாரண நிதி: காஷ்மீர் வெள்ளத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்காக உதவும் வகையிலும் காஷ்மீரைப் பற்றிய உணர்வு, பாரத தேச மக்களிடம் கொண்டு செல்லும் நோக்கிலும் பொது மக்களிடம் நிதி சேகரிப்பது என முடிவு செய்யப்பட்டது. தமிழகத்தில் பல இடங்களில் சேவாபாரதி தொண்டர்கள் நிதி வசூல் செய்தனர். (சேகரிக்கப்பட்ட நிதி ''சமூக சேவா நிதி'' அறக்கட்டளையிடம் ஒப்படைக்கப்பட்டது.)

❖ தாம்பரம் சானடோரியம் பகுதியில் உள்ள அம்மன் கோவிலில் 108 விளக்கு பூஜை நடைபெற்றது.

## அக்டோபர் 2014

❖ அக்டோபர் 10 மற்றும் 16ம் தேதிகளில் வட சென்னை ஜி.கே.எம் காலனி அரசு மேல்நிலைப் பள்ளி மாணவ மாணவியர்க்கான ஆளுமைத்திறன் பயிற்சியை சேவாபாரதி ஏற்பாடு செய்திருந்தது.

❖ பயிற்சியில் யோகா, தியானம், பொது சுகாதாரம், பாதுகாப்பு, சுற்றுச்சூழல், குடும்பம் மற்றும் பள்ளியில் நிலவ வேண்டிய ஆரோக்கியமான உறவு, பாலியல் பிரச்சினைகள் என பல்வேறு விஷயங்களில் சேவாபாரதி மூலம் வழிகாட்டல் தரப்பட்டது.

## நவம்பர் 2014

❖ சேவாபாரதி தமிழ்நாடு அறக்கட்டளையின் மாவட்ட பொறுப்பாளர்களுக்கான பயிற்சி முகாமானது பாப்பன்சத்திரம் விவேகானந்தா குருகுலம் பள்ளியில்






pdfelement
Remove Watermark Now

நவம்பர் 23ம் தேதியில் மாநிலத் தலைவர் திரு துரை.சங்கர் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட ரீதியான சேவைப் பணிகளை அதிகரிப்பதுடன், நிதி சேகரிப்பு, நகர பொறுப்பாளர்களுக்கான பயிற்சி வகுப்புகளுக்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில் நடைபெற்ற பயிற்சியில் சுமார் 58 நபர்கள் கலந்துகொண்டு பயிற்சி பெற்றனர்.

- தாம்பரம் சானடோரியம் பகுதியில் நவம்பர் 5ம் தேதி லிங்க பூஜை சிறப்பாக நடைபெற்றது.

## டிசம்பர் 2014

- வருடந்தோறும் டிசம்பர் மாதம் நடைபெற்று வரும் மகளிர் சேவை பண்புப் பயிற்சி முகாம், தென் சென்னை, வட சென்னை, மத்திய சென்னை, வந்தவாசி, கிருஷ்ணகிரி ஆகிய 5 இடங்களில் நடைபெற்றது. அதில் பயிற்சி பெற 168 நபர்களும் பயிற்சியாளர்கள் 14 நபர்களும் கலந்து கொண்டனர். அனைத்து இடங்களிலும் நடந்த முகாம்களின் தரம் உயர்ந்து வருவது சிறப்பாக கவனிக்கப்பட்டது.
- சேவா ப்ரஹல்ப திட்டம்: சேவாபாரதி தமிழ்நாடு மத்திய அலுவலகம் புரசைவாக்கம், அழகப்பா ரோட்டில் உள்ள கட்டிடத்தில் மாற்றப்பட இருப்பதால், அம்மையத்தில் ஆரம்பிக்க இருக்கும் சேவா திட்டங்கள் குறித்த சந்திப்பு, சேத்துப்பட்டு சக்தி காரியாலயத்தில் டிசம்பர் 7ம் தேதி நடைபெற்றது.
- பல்வேறு துறைகளைச் சார்ந்த பயிற்சி பெற்ற நிபுணர்கள் இச்சந்திப்பில் கலந்து கொண்டது மட்டுமல்லாமல், ஒவ்வொரு சேவை திட்டத்திற்கும் பல குழுக்களாக பிரிந்து, அத்திட்டம் சிறப்பாக நடைபெறும் வழிமுறைகள் பற்றி கலந்து ஆலோசிக்கப்பட்டது.




- அகில பாரத சேவா ப்ரமுக் திரு சுகாஸ்ராவ் அவர்களின் வருகையின்

பொருட்டு சேவாபாரதி சென்னை கோட்ட திட்ட பொறுப்பாளர்களின் கூட்டம் சென்னை, சின்மயா வித்யாலயா பள்ளியில் டிசம்பர் மாதம் 21ம் தேதி அன்று நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் சுமார் 164 நபர்கள் கலந்து கொண்டனர். அகில பாரத சேவா ப்ரமுக், குடிநீர், கோவில், இடுகாடு ஆகிய மூன்றும் அனைவருக்கும் சமமாக கிடைக்க வேண்டும் எனவும், மக்களிடம் சமத்துவ உணர்வு வரவேண்டும் எனவும் வலியுறுத்தினார்.

## ஜனவரி 2015

- சேவா நிதி

கடந்த ஆண்டைப் போல் இந்தாண்டும் மாவட்டந்தோறும் சேவா நிதி வசூலிக்கப்பட்டது. பொறுப்பாளர்களும் பயனாளிகளும் இணைந்து பல குழுக்களாக ஒவ்வொரு வீடுகளுக்கும் சென்று சேவாபாரதியின் சேவைகளைப் பற்றி எடுத்துரைத்து நிதி வசூல் செய்தனர்.

- பெரம்பூர் மேட்டுப்பாளையத்தில் அமைந்துள்ள அருந்ததியர் நகரில் ஜனசேவா டிரஸ்ட், பெரம்பூர் விவேகானந்தா பள்ளியுடன் இணைந்து சேவாபாரதி தமிழ்நாடு கோலப் போட்டியை நடத்தியது.

## பிப்ரவரி 2015

- சென்னையில் ஒருவாரம் நடைபெற்ற ஹிந்து ஆன்மிக மற்றும் சேவைக் கண்காட்சியில் சேவாபாரதியின் அரங்கம் பெரும்பாலான மக்களைக் கவரும் விதத்தில் அமைக்கப்பட்டிருந்தது. சுமார் 5,000க்கும் அதிகமானோர் பார்வையிட்டும்



1,200க்கும் மேற்பட்டவர்கள் நம் அமைப்ப... பற்றிய தங்கள் கருத்துக்களை பதிவு செய்ததுடன், குறிப்பிட்ட சேவைகளில் பங்கேற்கும் ஆர்வத்தையும் வெளிப்படுத்திக் கொண்டுள்ளார்கள்.

❖ தென் சென்னை தாம்பரம் சானடோரியத்தில் ஜட்ஜ் காலனி ஸ்ரீ கிருஷ்ணர் ஆலயத்தில் கோபூஜையும், திருவிளக்கு பூஜையும் சிறப்பாக நடத்தப்பட்டது. இதில் சுமார் 70 பேர் கலந்து கொண்டனர்.

## மார்ச் 2015

❖ பெரம்பூர் விவேகானந்தா பள்ளியில் கடந்த 12 ஆண்டுகளாக இயங்கிவரும் நியூரோதெரபி மையத்தின் ஆண்டுவிழா சிறப்பாக நடைபெற்றது.

விழாவில் மையத்தை ஆரம்பித்து நல்ல முறையில் இயக்கி உடல்நலக் குறைவால் ஓய்வு பெற்ற திரு குணசேகர் அவர்கள் பயனாளிகள் மற்றும் தெரபிஸ்டுகளால் கௌரவிக்கப்பட்டார்.

மற்ற மருத்துவரால் கைவிடப்பட்ட நிலையில் இந்த மையத்தில் சிகிச்சை பெற்று பூரண குணமடைந்து மறுவாழ்வு பெற்ற பலரின் அனுபவ பதிவுகளும், இந்த சிகிச்சை எந்தெந்த நோய்களுக்கு தீர்வாகும் என தெளிவுபடுத்தும் நோக்கில் இடம் பெற்ற கலந்துரையாடலும் குறிப்பிடத்தக்கது.

பல்வேறு காரணங்களால் மூளை வளர்ச்சி பாதிப்படைந்த பச்சிளம் குழந்தைகளிலிருந்து 15 வயதுக்குட்பட்டவர்கள் நம் சிகிச்சையால் நல்ல முன்னேற்றம் கண்டு வருவது பற்றி மையத்தின் இணை பொறுப்பாளர் திருமதி ஜெயலட்சுமி அவர்கள் எடுத்துரைத்தார்கள்.

விழாவின் சிறப்புரையை ஆர்.எஸ்.எஸின் மாநில செயற்குழு உறுப்பினர் திரு எல். நடராஜன் அவர்கள் வழங்கினார்கள்.



pdfelement
Remove Watermark Now

Remove Watermark Now

❖ ஏப்ரல் 20ம் தேதி அண்ணாமலை பல்கலைக் கழக தொலை தொடர்பு கல்வி மையத்தில் முதலாமாண்டு முதுநிலை



சமூகபணி (MSW) பயிலும் 92 மாணவர்கள், முனைவர் திரு குருமூர்த்தி தலைமையில் களப்பணி ஆற்றுவதற்காக நமது மத்திய அலுவலகத்திற்கு வருகை புரிந்தனர்.

மாணவர்களுக்கு ஆர்.எஸ்.எஸ் ப்ராந்த சேவா ப்ரமுக் திரு இராம இராஜசேகர் அவர்கள் நமது அமைப்பின் தோற்றம், குறிக்கோள், அமைப்பின் வளர்ச்சி, சேவைப் பணிகள், அது ஏற்படுத்தி வரும் சமுதாய மாற்றங்கள் பற்றி விரிவாக எடுத்துக் கூறினார்.

pdfelement

❖ **அன்பு இல்லங்களின் ஆண்டுவிழா**

சிறப்பான வகையில் சென்னை, ஆம்பூர், ஹோசூர் அன்பில்லங்களின் ஆண்டு விழா கொண்டாடப்பட்டது. குழந்தைகளின் தனித்திறன், கலை நிகழ்ச்சிகள், சிறப்பு விருந்தினர்களின் வாழ்த்துரை, அறுசுவை விருந்து



ஆகியன இடம் பெற்றன. விழாவில் அந்தந்த பகுதி மக்களும், இல்ல வளர்ச்சி குழுவினரும், உபயதாரர்களும் பெருமளவில் கலந்து கொண்டனர்.

❖ **ராஷ்ட்ரீய சேவா சங்கமம் - புதுதில்லி**

சேவாபாரதி உள்ளிட்ட 707 சேவை அமைப்புகள், அறக்கட்டளைகளின் கூட்டமைப்பான ராஷ்ட்ரீய சேவா சங்கமம் புதுதில்லியில் ஏப்ரல் 4,5,6 தேதிகளில் கூடியது.



மொத்தம் 3,050 பிரதிநிதிகள் பங்குகொண்டனர். தமிழக பிரதிநிதிகள் அதில் 130 பேர். சங்கமத்தை வணக்கத்திற்குரிய மாதா அமிர்தானந்தமயி அவர்கள் குத்து விளக்கேற்றி துவக்கி வைத்தார்கள். ஆர்.எஸ்.எஸ் அகில பாரத பொதுச் செயலர், சர்சங்கசாலக் பரம பூஜனீய மோகன்ஜி பாகவத் அவர்கள் சிறப்புரை ஆற்றினார்கள்.

❖ மாநில மகளிர் பண்புப் பயிற்சி முகாமிற்கான இரண்டு நாள் வர்க ஏப்ரல் 11,12ல் ஆதம்பாக்கம் டிஏவி பள்ளியில் நடைபெற்றது. சீரிய முறையில் 10 நாள் முகாம் நடைபெறுவதற்கான திட்டங்கள், செயல்படுத்த குழுக்கள், பொறுப்பாளர்கள் பற்றிய ஒரு முன் வரைவு ஏற்படுத்தப்பட்டது.



Remove Watermark Now
pdfelement

Remove Watermark Now

### ❖ மாநில மகளிர் சேவை பண்புப் பயிற்சி முகாம்

மாநில அளவில் 10 நாட்கள் நடைபெறும் மகளிர் சேவை பண்புப் பயிற்சி முகாம் இந்த ஆண்டு சென்னை ஆதம்பாக்கம்



டிஏவி பள்ளியில் மே 8 முதல் 17 வரை நடைபெற்றது. 8 மாவட்டங்களைச் சேர்ந்த 92 பெண்கள் கலந்துகொண்டு பயிற்சி பெற்றார்கள். முகாமில் சேவை என்பது ஏன் அவசியம், யாருக்கு எப்போது செய்வது, எப்படி செய்வது, சேவை செய்பவர்களுக்கு இருக்க வேண்டிய தகுதிகள், திறமைகள், பொறுப்புகள் யாவன என்பன கற்று தரப்பட்டன.

மேலும் யோகா, ஸ்லோகம் மற்றும் தொழில் பயிற்சிகளும் தரப்பட்டன. கலந்து கொண்டவர்கள் தாங்கள் விரும்பி தேர்ந்தெடுத்த சேவைகளில் கூடுதலான சிறப்புப் பயிற்சியும் தரப்பட்டது.

முகாமில் நடைபெற்ற சுமங்கலி பூஜையில் 132 பெண்கள் கலந்து கொண்டனர். எடுத்துக் கொண்ட பயிற்சியை நேர்முகமாக செய்து பார்க்கும் முகமாக கிராம தொடர்பிற்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

8 குழுக்களாக பிரிந்து சென்று சமூகத்தில் எப்படி நாம் அறிமுகப்படுத்திக் கொள்வது, அந்தப் பகுதி மக்களின் தேவைகளை விரைவாக கண்டறிந்து எந்தெந்த சேவைகளை துவக்குவது, குழுவில் யார் எந்த பொறுப்புகளை ஏற்பது என முடிவு செய்து குறுகிய காலத்திற்குள் சிறப்பானதொரு

pdfelement



முறையில் பண்பாட்டு வகுப்புகள், தீப பூஜை போன்றவற்றை செய்ததுடன் அந்தந்த கிராம மக்களின் அன்பான உபசரிப்பில் உணவும் உண்டு மனநிறைவுடன் திரும்பினர்.

பொதுவிழாவில் மகளிர் தாங்கள் கற்றுத் தேர்ந்த யோகா, விளையாட்டு போன்றவைகளை செய்து காட்டினார்கள்.

சேவாபாரதியின் மாநிலச் செயலாளரும் ஈரோட்டைச் சேர்ந்த ஆடிட்டர் திரு தேவி பிரசாத் அவர்கள் தம் சிறப்புரையில், பயிற்சி பெற்றவர்கள் தத்தம் பகுதியில் ஏதேனும் ஒரு சேவையை தொடர்ந்து ஒரு வருடத்திற்கு நடத்தி வரவேண்டும் என்றார். குழுவாக இயங்குவதும், தொடர்பில் இருப்பதும் அவசியம் என்றார்.

pdfelement

நிறைவு நிகழ்ச்சியில் அனைவரும் தங்கள் அனுபவங்களை பகிர்ந்து கொண்டதுடன், ஏதேனும் சேவையில் தங்களை உடனடியாக இணைத்து கொள்ளத்தக்க ஒரு உத்வேகத்தை இந்த 10 நாள் முகாம் மூலம் தாங்கள் பெற்றதாகவும் தெரிவித்தனர்.

❖ 24.5.2015 அன்று சேவாபாரதி மேலும் சில அமைப்புகளுடன் கை கோர்த்து மாபெரும் கட்டணமில்லா இருதய மருத்துவ பரிசோதனை முகாமை வேலூர் மாவட்டம்





Remove Watermark Now

ஒடுக்கத்தூரில் நடத்தியது. இதில் ஏராளமானோர் பயனடைந்தனர்.

Remove Watermark Now

- **மாநில நியூரோதெரபி பயிற்சி முகாம்**

சென்னை பெரம்பூர் விவேகானந்தா பள்ளியில் மே 21 முதல் 27 வரை நியூரோதெரபி பயிற்சி முகாம் நடைபெற்றது. 82 பேர் கலந்துகொண்டு பயிற்சி பெற்றார்கள். பயிற்சி பெற்றவர்கள் அவர்கள் வசிக்கும் பகுதியில் இயங்கும் நியூரோதெரபி மையத்துடன் இணைந்து சேவை செய்யும் நோக்கில் அந்தந்த மைய அமைப்பாளர்களால் பயிற்றுவிக்கப்பட்டனர்.

ஏழை, எளிய மக்களின் அன்றாட உடல் உபாதைகளை தீர்ப்பதில் சேவாபாரதியின் இந்த நியூரோதெரபி சேவை மிக முக்கிய பங்காற்றுகிறது எனலாம்.


- 29.5.2015ல் தருமபுரியில் நடைபெற்ற தீப பூஜையில் 45 தாய்மார்கள் கலந்து கொண்டனர். நிகழ்ச்சியில் 50க்கும் மேற்பட்ட பார்வையாளர்கள் கலந்து கொண்டனர். சேவாபாரதி தருமபுரி மாவட்ட செயலாளர் திருமதி கல்பனா அவர்கள் சிறப்புரை வழங்கினார்கள்.

pdfelement

## ஜூன் 2015

- **நீரிழிவு நோய் இல்லாத பாரதம்**

யோகக் கலையை முறையாக மேற்கொள்வதன் மூலம் சர்க்கரை நோயிலிருந்து மனிதகுலம் விடுபட முடியும் என்று



கடந்த 30 வருட ஆய்வுக்குப்பின் உறுதிபடுத்தியுள்ள (VYASA) பல்கலைக் கழகம் மத்திய அரசுடன் இணைந்து ஆர்.எஸ்.எஸ், வித்யாபாரதி, ஆரோக்கிய பாரதி, கிரீடா பாரதி ஆகிய அமைப்புகளுடன் சேவாபாரதியும் இணைந்து மேற்கொண்ட ஒரு வார யோக பயிற்சி முகாம் 300 இடங்களில் நடத்தப்பட்டது.

❖ ஜூன் 7ம் தேதி வந்தவாசி மாவட்டம் கொடியாலம் கிராமத்தில் சேவாபாரதியின் புதிய சேவா மையத்தின் பூமி பூஜை நடைபெற்றது. சேவாபாரதி தொண்டர்களும் கிராம மக்களும் ஏராளமாக கலந்து கொண்டனர்.

## ஜூலை 2015

### ❖ அரசு பள்ளி மாணவர்களுக்கு பாராட்டு விழா

12.7.2015 அன்று சேலத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் 10ம் வகுப்பு, 12ம் வகுப்பில் தேர்ச்சி பெற்ற 200 அரசு பள்ளிகளைச் சேர்ந்த 600 மாணவர்களுக்கு பரிசும் பாராட்டும் வழங்கப்பட்டது. சேவாபாரதி மாநிலத் தலைவர் திரு துரை. சங்கர் அவர்கள் சிறப்புரை ஆற்றினார்கள்.

### ❖ பொறுப்புகள் அறிவிப்பு

பொதுக்குழுவிற்கு முன் மாவட்டந்தோறும் பொறுப்பாளர்கள் மற்றும் பொறுப்புகள் அறிவிக்கப்படும் வழக்கத்தை ஒட்டி, 5.7.2015 அன்று வட சென்னை, தென் சென்னை விபாக்கிலும் 13.7.2015 அன்று தருமபுரியிலும் பொறுப்பாளர்கள் அறிவிக்கப்பட்டனர்.

★★★



Remove Watermark Now
pdfelement

Remove Watermark Now



விழா மேடை


சங்கமப் பிரதிநிதிகளில் ஒரு பகுதியினர்


சங்கமத்தில் பங்குபெற்ற தமிழக பிரதிநிதிகள்

Remove Watermark Now

